## சுருக்கம்

தொழில் – சிப்காட் – நில எடுப்பு – திருவள்ளூர் மாவட்டம் – கும்மிடிப்பூண்டி வட்டம் – மாநெல்லூர், சூரப்பூண்டி, சாணாபுத்தூர், மாதர்பாக்கம் மற்றும் வாணியமல்லி ஆகிய கிராமங்கள் – 908.26.70 ஹெக்டேர் (2243.40 ஏக்கர்) பட்டா நிலங்கள் நில எடுப்பு – 76.91.0 ஹெக்டேர் (189.97 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலங்கள் நில உரிமை மாற்றம் – தமிழ்நாடு தொழில் முன்னேற்ற (சிப்காட்) நிறுவனம் தொழிற்பூங்கா அமைக்க – தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–ன் கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்துதல் மற்றும் நில எடுப்புக்கான பணியிடங்கள் ஏற்படுத்துதல் – நிருவாக அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (சிப்காட்–நி.எ)த் துறை

அரசாணை (நிலை) எண்.180

நாள்: 12.8.2022
சுபகிருது வருடம், ஆடி 27,
திருவள்ளுவர் ஆண்டு – 2053

படிக்க:

1) திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கடித எண்.எப்3/21068/2021, நாள் 12.10.2021.

2) நில நிர்வாக ஆணையரின் கடித எண்.ந.க.எம்1/1623019/2021, நாள் 18.11.2021.

******

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், மாநெல்லூர், சூரப்பூண்டி, சாணாபுத்தூர், மாதர்பாக்கம் மற்றும் வாணியமல்லி ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற (சிப்காட்) நிறுவனம் தொழிற்பூங்கா அமைப்பதற்காக 908.26.70 ஹெக்டேர் (2243.40 ஏக்கர்) பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)–ன் கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திடவும் மற்றும் 76.91.0 ஹெக்டேர் (189.97 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்திடவும் நிர்வாக அனுமதி வழங்க திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார். அதன்படி, நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள நிலங்களின் விவரம் : –

| வ. எண். | கிராமம் | நில எடுப்பு (ஹெக்டேர்ஸ்) | | | | | நில உரிமை மாற்றம் | மொத்த விஸ்தீரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நன்செய் | புன்செய் | மானாவாரி | கிராம நத்தம் | மொத்தம் | புறம்போக்கு | |
| 1. | மாநெல்லூர் | 12.17.50 | 54.36.00 | 44.69.00 | 0.23.0 | 111.45.50 | 11.73.00 | 123.18.50 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | சூரப்பூண்டி | 04.47.50 | 105.92.50 | 53.07.00 | | 163.47.00 | 18.38.50 | 181.85.50 |
| 3. | சாணாபுத்தூர் | 31.39.00 | 150.09.50 | 61.48.00 | | 242.96.50 | 18.03.50 | 261.00.00 |
| 4. | மாதர்பாக்கம் | 26.85.50 | 179.60.80 | 07.88.00 | | 214.34.30 | 6.63.00 | 220.97.30 |
| 5. | வாணியமல்லி | 0 | 34.04.50 | 141.98.90 | | 176.03.40 | 22.13.00 | 198.16.40 |
| மொத்தம் (ஹெக்டேர்ஸ்) | | 74.89.50 | 524.03.30 | 309.10.90 | 0.23.0 | 908.26.70 | 76.91.00 | 985.17.70 |

2. மேற்காணும் நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்காணும் 9 அலகுக்குரிய சிறப்பு பணியிடங்கள் தேவைப்படுவதாகவும், அதில் பட்டியலில் கண்ட வரிசை எண் 1 மற்றும் 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்திலும், வரிசை எண் 3 முதல் 8 வரையுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியம்/வெளிமுகமை மூலமாகவோ நிரப்பிடலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | பதவியின் பெயர் | பணியாளர் எண்ணிக்கை (அலகு 1-க்கு) | | மொத்த பணியாளர் எண்ணிக்கை (9 அலகுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | தனி வட்டாட்சியர் | 1 | 1X9 | 9 |
| 2. | வருவாய் உதவியாளர் | 1 | 1X9 | 9 |
| 3. | தனி வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலையில்) | 2 | 2X9 | 18 |
| 4. | தட்டச்சர்/கணினி இயக்குநர் | 1 | 1X9 | 9 |
| 5. | அலுவலக உதவியாளர் | 1 | 1X9 | 9 |
| 6. | சார் ஆய்வாளர் (நில அளவை) | 2 | 2X9 | 18 |
| 7. | வரைவாளர் | 1 | 1X9 | 9 |
| 8. | புல உதவியாளர் | 4 | 4X9 | 36 |
| | மொத்தம் | 13 | | 117 |

3. மேலும், நில எடுப்புப் பணிகளை துரிதப்படுத்தவும், 9 அலகுகளில் பணிபுரியும் அலுவலர்களின் பணிகளை கண்காணித்திடவும் ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான அலுவலகம் மற்றும் பிற பணியாளர்கள் நியமிப்பதும் அவசியமாகிறது என்றும், அதில் பட்டியலில் காணும் வரிசை எண் 1 முதல் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்திலும், வரிசை எண் 4 முதல் 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியம்/வெளிமுகமை மூலமாகவும் நிரப்பிடலாம் எனவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | பதவியின் பெயர் | பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) | 1 |
| 2. | துணை ஆட்சியர் (ஒருங்கிணைப்பு அலுவலர்) | 1 |
| 3. | தனி வட்டாட்சியர் | 1 |

| | | |
|---|---|---|
| 4. | வருவாய் உதவியாளர் | 2 |
| 5. | இளநிலை உதவியாளர் | 2 |
| 6. | அலுவலக உதவியாளர் | 1 |

4. மேற்காணும் நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள பணியாளர்களுக்கு ஓராண்டுக்கான ஊதியமாக மொத்தம் ரூ.4,33,26,936/- என கணக்கிடப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்படவுள்ள நிலங்களின் உத்தேச நில மதிப்பு ரூ.454,26,68,922/- என கணக்கிடப்பட்டுள்ள நிலையில், இதற்கான 14.5% நிருவாக செலவினமாக ரூ.65,86,86,994/- என கணக்கிடப்பட்டுள்ளது.

5. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், மாநெல்லூர், சூரப்பூண்டி, சாணாபுத்தூர், மாதர்பாக்கம் மற்றும் வாணியமல்லி ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற (சிப்காட்) நிறுவனம் தொழிற்பூங்கா அமைப்பதற்காக 908.26.70 ஹெக்டேர் (2243.40 ஏக்கர்) பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997-ன் கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திட மற்றும் 76.91.0 ஹெக்டேர் (189.97 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்திட நிர்வாக அனுமதியும், நில எடுப்பு மற்றும் நிருவாகச் செலவினங்களுக்காக மொத்தம் ரூ.520,13,55,916/- தொகையினை நிதி ஒப்பளிப்பு செய்யவும், நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக புதிதாக 117+8 (125) பணியிடங்களை 31.12.2024 வரையிலான காலத்திற்கு தோற்றுவிக்கவும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்ததுடன், கீழ்காணும் முறையில் பணி நியமனம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | பதவி | பணியிடங்-களின் எண்ணிக்கை | ஊதிய முறை | ஊதிய கற்றை | தொகுப்பூதியம் |
|---|---|---|---|---|---|
| 1. | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) | 1 | காலமுறை ஊதியம் | Level-26 (Rs.61900-228100) | - |
| 2. | துணை ஆட்சியர் (ஒருங்கிணைப்பு அலுவலர்) | 1 | காலமுறை ஊதியம் | Level-22 (Rs.56100-205700) | - |
| 3. | தனி வட்டாட்சியர் | 10 | காலமுறை ஊதியம் | Level-20 (Rs.37700-138500) | - |
| 4. | வருவாய் உதவியாளர் | 11 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level-10 (Rs.20600-75900) | ரூ.20,000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | தனி வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலையில்) | 18 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level–10 (Rs.20600–75900) | ரூ.20,000/– |
| 6. | தட்டச்சர்/ கணினி இயக்குநர் | 9 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level–8 (Rs.19500–71900) | ரூ.15,000/– |
| 7. | சார் ஆய்வாளர் | 18 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level–11 (Rs.35400–130400) | ரூ.20,000/– |
| 8. | வரைவாளர் | 9 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level–10 (Rs.20600–75900) | ரூ.20,000/– |
| 9. | புல உதவியாளர் | 36 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level–1 (Rs.15700–58100) | ரூ.10,000/– |
| 10. | அலுவலக உதவியாளர் | 10 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level–1 (Rs.15700–50000) | ரூ.10,000/– |
| 11. | இளநிலை உதவியாளர் | 2 | காலமுறை ஊதியம்/ ஓய்வு பெற்ற பணியாளர் (அ) வெளிமுகமை | Level–8 (Rs.19500–62000) | ரூ.15,000/– |
| | மொத்தம் | 125 | | | |

6. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கோரிக்கை மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், மாநெல்லூர், சூரப்பூண்டி, சாணாபுத்தூர், மாதர்பாக்கம் மற்றும் வாணியமல்லி ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற (சிப்காட்) நிறுவனம் தொழிற்பூங்கா அமைப்பதற்காக 908.26.70 ஹெக்டேர் (2243.40 ஏக்கர்) பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–ன் கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திடவும் மற்றும் 76.91.0 ஹெக்டேர் (189.97 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்திடவும்

மற்றும் நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக புதிதாக 117+8 (125) பணியிடங்களை மேலே பத்தி 5-ல் விவரித்துள்ளவாறு 31.12.2024 வரையிலான காலத்திற்கு தோற்றுவிக்க நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. நில எடுப்பு மற்றும் நிருவாகச் செலவினங்களுக்காக (தோராயமாக) மொத்தம் ரூ.520,13,55,916/- (ரூபாய் ஐநூற்று இருபது கோடியே பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினாறு மட்டும்) (உத்தேச நில மதிப்பு ரூ.444,71,59,308 + நிருவாகச் செலவினங்கள் (14.5%) ரூ.75,41,96,608/-) தொகையினை, சிப்காட் நிறுவனம் நிதி ஒப்பளிப்பு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

7. நிலமதிப்பு கணக்கீடு செய்யப்படும்பொழுது அரசாணை (நிலை) எண்.29, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 24.01.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.411, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 06.08.2020-இல் உள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8. மேலும் கிராமங்களிலுள்ள அரசு புறம்போக்கு நிலங்களை சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்குரிய உரிய முன்மொழிவினை நில நிர்வாக ஆணையர் வழியாக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

9. மேலே பத்தி 6-ல் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் (நில எடுப்பு) ஊதிய செலவினம் மற்றும் நிருவாகச் செலவினமாக ஜூலை 2022 முதல் மார்ச் 2023 வரை ரூ.2,69,47,413/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து நானூற்று பதின்மூன்று மட்டும்) முதற்கண் நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேலும், 2023-2024 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தொகையை வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2022-2023-இல் சேர்ப்பதற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.

10. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தோராயமாக நிர்ணயிக்கும் நிலமதிப்பினை சிப்காட் நிறுவனத்தால் கீழ்காணும் கணக்கு தலைப்பில் வைப்பீடு (Deposit) செய்யப்பட வேண்டும்:-

> "K- வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள் - 8443-00 உரிமையியல் வைப்பீடுகள் - 101 வருவாய் வைப்பீடுகள் - AA வருவாய் வைப்பீடுகள் - 801 - வரவுகள் - 02 - வட்டி பெறா வைப்பீடுகள்
>
> (ததொகு 8443-00-101-- AA- 801 02) (வரவுகள்)"

11, நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்காண சம்பளம் மற்றும் ஏனைய தொகையை, சிப்காட் நிறுவனத்திடமிருந்து பெற்று கீழ்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்படவேண்டும்:-

"0070 ஏனைய நிருவாகப் பணிகள் 60 – ஏனைய பணிகள் – 800 ஏனைய வரவுகள் – CH தனியார், பொதுத் துறைகளுக்காகச் செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் மத்திய அரசு தொடர்பான திட்டப் பணிக்காக செய்த நிருவாகப் பணி குறித்த பணியாளரமைப்புச் செலவை ஈடு செய்தல் –227–வரி அல்லாத கட்டணங்கள் 99 – ஏனையவைகள் (ததொகு 0070–60–800–CH 227 99) "

12. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2053–00 – மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – AN தொழில் வளர்ச்சி மையங்களுக்காக சிப்காட் நிறுவனத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான பணியாளரமைப்பு

(ரூபாயில்)

| | |
|---|---|
| 301 சம்பளங்கள் 01 அடிப்படை சம்பளம் (ததொகு 2053–00–094–AN– 301 01) | ரூ.92,88,900/– |
| 301 சம்பளங்கள் 02 மருத்துவப்படி (ததொகு 2053–00–094–AN–301 02) | ரூ.32,400/– |
| 301 சம்பளங்கள் 06 வீட்டு வாடகைப்படி (ததொகு 2053–00–094–AN–301 06) | ரூ.8,85,600/– |
| 303 அகவிலைப்படி–01 அகவிலைப்படி (ததொகு 2053–00–094–AN–303 01) | ரூ.9,05,913/– |
| 301 சம்பளங்கள் – 08 நகர ஈட்டுப்படி (ததொகு 2053–00–094–AN–301 08) | ரூ.1,29,600/– |
| 333 தொழில் முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம் – (ததொகு 2053–00–094–AN–333 04) | ரூ.1,57,05,000/– |

13. இத்திட்டத்திற்கான நில எடுப்பு பணி முடிவடைந்த பின் செலவுகள் அனைத்தும் உரிய கணக்கு தலைப்பிற்கு, உரிய முறையில் மாற்றம் செய்யப்படவேண்டும். மேலும், இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் செலவினை கவனித்து அவற்றினை உரிய அரசு கணக்குத் தலைப்பில் வைப்பு செய்வதை கண்காணிக்கும்படியும் நில நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

14. மேலே பத்தி 9–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.2,69,47,413/– 2022–2023 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினம் 2022–2023 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 9–இல்

ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, நில நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2022–2023 ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான உரிய கருத்துருவையும் தவறாது நிதி (தொழில்கள்/வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு நில நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

15. இவ்வாணையானது நிதித்துறை அ.சா.கு.எண்.37614/நிதி(தொழில்)/ 2022, நாள் 10.8.2022–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.523 (ஐநூற்று இருபத்து மூன்று) (IFHRMS ASL No.2022060523) PSL 202208 PSL 0234.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. கிருஷ்ணன்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்:</u>

நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.

மேலாண்மை இயக்குநர்,
சிப்காட், 19–A, ருக்மணி லஷ்மிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்.

சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நிஎ).
சிப்காட் கும்மிடிப்பூண்டி திட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

முதன்மை பொது கணக்காயர் (சி.ஏ), சென்னை – 600 018.

முதன்மை கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 018.

மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.

துணை கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நி.நி.2) துறை, சென்னை – 600 009.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக((அ.ந.மு. II/ஜிஜஎம்.) துறை
சென்னை – 600 009.

நிதி (வ.செ.பொ.–I/II/வ.வ. I/ தொழில்/ஊதிய பிரிவு) துறை, சென்னை – 600 009.

இ.கோப்பு/உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

12-8-2022

**பிரிவு அலுவலர்**

12/8/2022